REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

கடன் கொடுத்தார் நெஞ்சம் கலங்குகிறது!

கடன் வாங்கியவர்கள், வாங்கிய கடனைத் திருப்பித் தர பிடிவாதமாக மறுத்துவிடுவதால், கடன் கொடுத்தவர்கள், கடன்காரர்கள் வீட்டு வாயில்களின் முன்பே உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் சம்பவங்கள் ஆமதாபாத்தில் நடைபெற்றுவருகிறது.

நண்பர் ஒருவர் வாங்கிய கடன் ரூ. 120-யும் திரும்பத் தர மறுக்கவே, கோவிந்த் ராமச்சந்திரா என்பவர், தமது உடைகளை மண்ணெண்ணெயால் நனைத்து தீயிட்டுக்கொண்டாராம். இப்படிச் செய்தும்கூட கடன் வாங்கியவர் சிறிதும் மனந் தளராமல் அவரை அவ்விபத்திலிருந்து தப்புவித்து போலீசாரிடம் ஒப்படைக்க, போலீசாரும், அவர் தற்கொலை செய்ய முயற்சித்தார் என்று குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

மலர் 2] சென்னை: தை 4உ திங்கள் (17—1—55) ★ ★ வெளியூர்: தை 5உ செவ்வாய் (18—1—55) [இதழ் 184

திராவிட மக்களை நிரந்தர அடிமைகளாக்க......

பச்சாத்தாபமா? பயமுறுத்தலா?

அட்லாண்டிக் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து, இராணுவத்தை உருவாக்காமலிருக்கும் நிபந்தனையை மேற்கு ஜெர்மனி ஏற்றுக் கொள்ளுமானால், ஐக்கிய ஜெர்மனி ஏற்படுவதற்குப் பூர்வாங்கமாக, மேற்கு ஜெர்மனியை தாங்கள் அங்கீகாரம் செய்துகொள்ளத் தயார் என்று சோவியத் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

பாரிஸ் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தினால் மேற்கு ஜெர்மனி ஒரு புதிய யுத்தத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சோவியத் சர்க்கார் எச்சரிக்கை யொன்றை விடுத்துள்ளது

குடியரசு தினம் குதூகலம் பெற?

பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் குலாம்முகமது, இத்திங்கள் 26-ந் தேதி டில்லிக்கு வருகை தருகிறார். அவருடன் பாகிஸ்தான் மத்திய சர்க்கார் அமைச்சர்கள் சிலரும்—டாக்டர் கான்சாகிப், இஸ்கந்தர் மிர்சா போன்றோர் வரக்கூடுமெனத் தெரிகிறது.

இந்தியாவின் ஜனாதிபதி இராசேந்திரரின் அழைப்பிற்கிணங்கவே, இந்தியக் குடியரசு தினக் கொண்டாட்டத்தையொட்டி அவர் இந்தியா வரவிருக்கிறாராம்.

தேடிவரும் பரிசு!

இந்தியாவில் புதிதாக யுரேனியத் தாதுக்கள் இருக்குமிடங்களைக் கண்டுபிடிப்போருக்கு 100 ரூபாய் முதல் 10,000 ரூபாய்கள் வரை பரிசளிக்கப்படுமென்று இந்திய சர்க்கார் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

தொழிலாளர் அப்பீல் டிரிபியூனலை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தற்போதுள்ள பஞ்சாயத்து முறையை அமுல் நடத்துவது பற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

அகில இந்திய கட்சிகளின் 'ஐக்கிய முன்னணி'

அன்று அடித்து மகிழ்ந்தவர்கள் இன்று அடிபடுகிறார்கள்

அவர்கள் தேய்கிறார்கள்; நாம் வளர்கிறோம்

மதுரை மாநாட்டில் ஈ. வெ. கி. சம்பத் சிறப்புரை

"மதுரை கடந்த சில ஆண்டுகளாகவே பல அரசியல் நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களனாய் இருந்து வருவதைக் காண்கிறோம். எட்டு ஆண்டுகட்கு முன்பு இந்த ஊரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டதும், தோழர்கள் அடிக்கப்பட்டதும் உங்கட்கு நினைவிலிருக்கலாம். அன்று அந்த மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டதற்கு யார் காரணவான்களாய் இருந்தார்களோ, அவர்களே இன்று, அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் தாக்கப்பட்டிருக்கிறார்கள்; அடிக்கப்பட்டிருக்கிறார்கள்—நம்மால் அல்ல, அவர்கள் அடிக்கப்பட்டது—நம்மால் அடிக்கப்பட வேண்டிய அவர்கள், இன்று நீதியால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்று நம்மை அடித்து மகிழ்ந்தவர்கள், இன்று அடிபடுகிறார்கள்; இந்த நாட்டின் நீதியின் வரலாறு நாம் அறிந்ததுதானே!"

"இந்த நிலை மாற்றம் எதைக் காட்டுகிறது? நாட்டிலே, நாம் எட்டு ஆண்டுகளுக்கு முன் எந்தக் கருத்துக்களைச் சொல்லி வந்தோமோ, அதே கருத்துக்களைத்தான் இன்றும் சொல்லி வருகிறோம்; ஆனால், அன்று நாம் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் குறைவு—எதிர்த்தவர்கள் ஏராளம்; ஆனால், இன்று நமது கருத்துக்களும் லட்சியமும், நீதியின்பாற்பட்டவை—நேர்மையானவை என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டிருப்பதால், நம்மை எதிர்த்தவரின் எண்ணிக்கை தேய்ந்து வருகின்றது. நாம் வளர்ந்திருக்கிறோம்—இதைத்தானே அண்மையில் இங்கு நடைபெற்ற சம்பவங்கள் கூறுகின்றன."

—இவ்வாறு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கடந்த 9-1-55-ல் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

காமராசர் முதன் மந்திரியானதும், 'அவர் நம் இனத்தவர்,' என்ற அற்ப சந்தோஷத்தில் அவர் பின்னால் நாம் ஓடவில்லை. காமராசர் வரவுக்கு நாம் வாழ்த்து கூறினோம்; காரணம், திராவிட சமுதாயத்தின் எதிர்காலத்தை இருள் சூழவைக்கும் ஆச்சாரியாரின் கல்வி திட்டத்தை அவர் கைவிட்டார் என்பதற்காக!

காமராசர், மேலும், மக்களுக்கு—ஏழை எளியவரின் வாழ்வில் நிலவும் வறுமை நீங்க, சிறுமை போக சிறிதேனும் பாடுபடுவார் என்றும் எதிர்பார்த்தோம்; ஆனால், இன்று, அவரது ஆட்சியில் ஏமாற்றமே மிஞ்சுகிறது!

நாட்டில் நிலவும் எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளை மறந்து, கல்வித் திட்டம் ஒன்றைப் புகுத்தி, நம்மை வம்புக்கிழுத்தார் ஆச்சாரியார்; அவரது திட்டத்தை எதிர்த்த நம்மை, அவர் கைவசமிருந்த அடக்குமுறை வெறிநாய்களை அவிழ்த்துவிட்டுத் தாக்கினார்; ஆனால், நாடு என்ன தீர்ப்பு வழங்கிற்று? இன்று அவர் 'இராமாயணம்' படிக்கும் கோவில் தூணில் கட்டுண்டு கிடப்பதை நாம் காண்கிறோம்.

காமராசர் இந்த நிலைகளை மறந்துவிடக்கூடாது.

எதிரிகளின் நிரந்தர 'ஐக்கிய முன்னணி'

"கடந்த தேர்தலின்போது கம்யூனிஸ்டுகள் ஒரு 'ஐக்கிய முன்னணி' அமைத்தனர்; இன்று, அது செத்துமடிந்துவிட்டது. இப்போது காங்கிரஸ்காரர்கள், ஆந்திராவில், தேர்தலுக்காக வேறு இரண்டொரு கட்சிகளைக் கூட்டுச் சேர்த்து ஒரு 'ஐக்கிய முன்னணி' அமைத்திருக்கிறார்கள்; இதன் ஆயுட்காலம் பொறுத்திருந்து நிர்ணயிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்த 'ஐக்கிய முன்னணி'க்குப் பெயர் வேண்டுமானால் 'ஐக்கிய முன்னணி' என்று இல்லாதிருக்கலாம்; ஆனால், செய்கையால், கொள்கையால் அகில இந்தியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி, ஒரு 'ஐக்கிய முன்னணி' அமைத்திருக்கிறார்கள் – திராவிடர்களை என்றென்றைக்கும் வட நாட்டவருக்கு அடிமைகளாய் பிணைத்து வைப்பதற்கு!

நாம்—தி. மு. கழகம்—ஒரு விடுதலை இயக்கமாக—திராவிடத்தின் உடைமைகளும், திராவிடத்தின் உழைப்பின்விளைவுகளும் திராவிடருக்கே பயன்பட வேண்டும் — அதற்கான உரிமை வேண்டும் என்று கோரும் விடுதலை இயக்கமாக விளங்கி வருகிறோம்; ஆனால், எல்லா 'அகில இந்தியா'க்களும் ஒருமுகமாக அந்த விடுதலை கோரிக்கையை எதிர்த்து வருகிறார்கள்.

காங்கிரசானாலும் சரி, கம்யூனிஸ்டானாலும் சரி, ம. சோ. கட்சியானாலும், இந்து மகாசபையானாலும் சரி—எந்த 'அகில இந்திய' நிறுவனமானாலும், அவற்றிடையே எத்தனை ஆயிரம் கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும், 'திராவிடத்தை வடநாட்டுடன் இணைத்தே வைப்போம்' என்ற கொள்கையில், 'திராவிடரை, வடநாட்டவரின் அடிமைத்தனயி

(4-ம் பக்கம் பார்க்க)

போகட்டும்!

"உலகப் பிரசித்தி பெற்ற தாஜ் மகால் கட்டிடம்தான் வால்மீகி முனிவர் வசித்த இடம்; அங்கிருக்கும்போதுதான் அவர் இராமாயணக் காதையை எழுதினார்."

"குடிசைத் தொழில் என்பது ஒரு வகைப் பூச்சி; அதிலிருந்துதான் பட்டு தயார் செய்யப்படுகிறது."

"ஆரியர்கள் என்பது கங்கை நதியில் வந்து கலக்கின்ற ஒரு பெரிய நதி"

இவ்வாறு, அசாம் மாநில இடைநிலைப்பள்ளி மாணவர்கள், தங்களிடம் கொடுக்கப்பட்ட கேள்விகள் சிலவற்றிற்கு பதில் தந்துள்ளார்களாம்!

இரங்கூன் இரயிலில் துணிகரக் கொள்ளை!

தென்னிந்தியப் பெண்ணை மிரட்டி நகைகளை அபகரித்தனராம்

இரங்கூன், ஜன. 17—

இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் ஓடிக்கொண்டிருந்த ஒரு ரயிலில் துணிகரக் கொள்ளையொன்று நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் அதில் இரு கொள்ளைக்காரர்கள் ஏறிக்கொண்டு அதே வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த தென்னிந்திய பெண் ஒருவரை, தம் கையிலிருந்த துப்பாக்கி (ரிவால்வர்)யைக் காட்டி பயமுறுத்தி, அவர் அணிந்திருந்த தங்க நகைகள் அத்தனையையும் கொள்ளையடித்து விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கொள்ளையைத் தடுக்க முயன்ற இன்னுமொரு பிரயாணிக்கு வயிற்றில் கத்திக்குத்து ஏற்பட்டது என்றும் தெரிகிறது.

அடுத்த ரயில் நிலையத்தில் வண்டி நின்றதும், கொள்ளையர்கள், தங்களை யாரும் துரத்தக்கூடாதென்பதற்காக, துப்பாக்கிக் குண்டுகளை வெடித்துக்கொண்டே ஓடிவிட்டனர் எனத் தெரிகிறது.

'உயிர்பிச்சை' கேட்டும் பலனில்லை

இரு கம்யூனிஸ்டுகள் ஒரு இந்தியரை சுட்டுக் கொன்றனர்!

60 தொழிலாளர் முன்னிலையில் நடைபெற்ற சம்பவம்

ஈபோ (வட மலேயா)—

இங்குள்ள ரப்பர் தோட்டத்தில் உயர்தர அதிகாரியாக இருந்த ஒரு இந்தியரை இரண்டு கம்யூனிஸ்டுகள் சுட்டு வீழ்த்தியதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கன்னையா என்ற அந்த அதிகாரி, இரண்டு கம்யூனிஸ்டுகளால் அழைத்துச் செல்லப்படுவதை 'சுமார் 60 தோட்டத் தொழிலாளர்கள், 'என்ன செய்வது,' என்று தெரியாமலேயே பார்த்துக்கொண்டிருந்தனராம்.

தோட்டத்தின் சேகரிப்பு நிலையம் ஒன்றில் வேலை செய்வோரை மேற்பார்த்துக்கொண்டிருந்த அந்த அதிகாரியைப் பார்க்க வேண்டும் என்று அந்த கம்யூனிஸ்டுகள் கோரினராம்.

தொழிலாளர்கள், 'கன்னையாவைக் கொல்ல வேண்டாம்,' என்று கேட்டுக்கொண்டனராம்.

கன்னையாவைப் பார்த்துப் பேச மட்டுமே தாங்கள் விரும்புவதாக அந்த கம்யூனிஸ்டுகள் கோரினராம்.

உடனே கன்னையாவை அவர்கள், தோட்டத்தை விட்டு 50 கஜ தூரம் அழைத்துச் சென்றனராம்.

தூரத்திலிருந்தவர்களுக்கு, கன்னையா, தன் கையிலிருந்த மோதிரத்தையும், கைக் கடிகாரத்தையும் கழற்றித் தருவது தெரிந்ததாம்.

பின்னர், கன்னையா, மண்டியிட்டு, உயிர்ப்பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அந்த இரு கம்யூனிஸ்டுகளும் அவரைச் சுட்டு வீழ்த்திவிட்டு, காட்டிற்குள் மறைந்துவிட்டனராம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—1—1955 திங்கள்

முகமூடி கிழிந்தது!

டாக்டர் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், இன்றுள்ள கல்வித் துறையில் புகுத்தப்பட வேண்டிய திருத்தங்களைக் கூறும் அளவிற்கு, அத்துறையில் புலமை வாய்ந்திருப்பவரா இல்லையா என்பதில் ஒருமனப்பாடு இருக்க நியாயம் கிடையாது. அத்தகு ஆற்றல் அவருக்கு உண்டு என்பர் சிலர்; அறவே கிடையாது என்பர் பலர். ஆனால், கல்வித் துறையில் காணத்தகு ஏற்பாடுகள் இவை இவை எனக் குறித்திட, அவருக்குள்ள உரிமையை எவரும் மறுக்கத் துணியார். அவ்வுரிமை அனைவருக்கும் பொதுவானதாகும். எனவே அன்பர் ஆச்சாரியார், அப்பிறப்புரிமையை கல்வித் துறை பற்றிய சீர்திருத்தங்களைக் கூறுவதில் செலவிடுவதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. அதற்கு மாறாக, பற்பல துறைகள் பற்றி அவர் தரும் விளக்கங்கள், அவருடைய உள்ளத்தின் தன்மையை ஒளிவு மறைவு இல்லாமல் உலகுக்கு உணர்த்துவதாக அமைவதால், எல்லாப் பொருள்கள் குறித்தும் கருத்தறிவிக்கத் தனக்குள்ள உரிமையைச் செயலாற்றத் தவறவிடக்கூடாது என அன்பர் ஆச்சாரியாரை நாம் மன்றாடியும் வேண்டிக்கொள்கிறோம்.

நாகபுரி பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தொடக்கக் கல்வி முதல் கல்லூரி பட்டப்படிப்புவரை செய்யப்பட வேண்டிய திருத்தங்களைப் பொதுப்படையாக ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். திருத்தங்களைக் கூறினாரே ஒழிய அவைகளை எவ்வாறு வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பது என்பதற்கான வழிவகைகளை, திருத்தங்களைக் கூறிய அம்மகானுபாவர் வரையறுத்துக் கூறாது விட்டுவிட்டார். அப்பெரும பணியைக் கல்வித் துறை நிபுணர்களுக்கு ஒதுக்கிவிட்டாரோ அல்லது தான் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டால்- அவைகளை வாயால் சொல்வதற்குப் பதிலாக-செயலளவில் நிறைவேற்றிவிடலாம் என அன்பர் ஆச்சாரியார் முடிவு கட்டிக்கொண்டு, அவைகளைக் கூறாது விடுத்தாரோ—யார் கண்டார்கள்?

தொடக்கக் கல்வி முதல் கல்லூரிப் பட்டப் படிப்புவரை குறைகள் மலிந்து கிடக்கின்றன—அவைகளைக் களைந்தெறிந்து, பொதுவாக சமுதாயத்திற்கும் குறிப்பாகக் கல்வி கற்கும் தனி நபர்களுக்கும் பயனளிக்கும் வகையில், செப்பனிட்ட கல்வித் துறையைக் காணவேண்டும் என்பது, நாட்டில் பொதுப்படையாக நிலவும் கருத்தாகும். இக்கருத்தை நூற்றுக்கு நூறு உண்மையானது என அப்படியே ஒப்புக்கொள்வதற்குமில்லை; உண்மை ஒரு துளியும் கிடையாது எனப் புறக்கணித்து விடுவதற்குமில்லை.

இன்றுள்ள கல்வியின் தன்மை, அதைக் கற்றுத் தேறும் அனைவருக்கும் வயிற்றுக்கு வழி காட்டுவதாக இல்லை என்பது, இன்றைய கல்வி முறைமீது சாட்டப்படும் முதல்—முக்கிய—மூலக் குற்றமாகும். இப்பொழுதுள்ள கல்வி முறையைக் கணிசமாகத் திருத்தி அமைக்க வேண்டுமெனக் கிளம்பியுள்ள—கிளப்பப்பட்டு வரும் கூக்குரலில் பெரும் பகுதி, மேற்குறிப்பிட்டுள்ள கண்ணோட்டத்திலிருந்து தோன்றியுள்ளதேயாகும். கல்வி கற்பதால் ஏற்படும் பயன் இவை இவை தாம் எனத் தரப்படும் பட்டியலில், வயிற்றுப் பிழைப்பு ஒன்று மட்டுந்தான் இடம் பெறுகிறதா அல்லது வேறு வாழ்க்கைத் துறைக்கு இன்றியமையாத தேவைகளாக உள்ள மற்றப் பண்பாடுகளும் இடம் பெறுகின்றனவா என்பது ஆரயத்தக்கதாகும். இத்தகு ஆராய்ச்சியில் வெளிப்படும் முடிவுகளைக் கொண்டுதான், இன்றுள்ள கல்வி முறையின் விளைவாக உள்ளவை என்று சொல்லப்படும் குறைவு நிறைவுகளை மதிப்பிட முனைய வேண்டும். இம்முறையை மேற்கொள்ளாது, இன்றைய கல்விமுறை ஒன்றுக்கும் உதவாதது எனப் பொதுப்படையாகக் கூறுவது இருக்கும் கல்வியைப் பெறும் ஆர்வத்தையும் ஒழித்து, சிறந்தக் கல்வி முறையை வகுக்க மேற்கொள்ளும் முயற்சியிலும் குழப்பம் ஏற்படுவது தான் கைகண்ட பலனாக முடிவுறும். நிற்க,

அன்பர் ஆச்சாரியார் அதிகாரத்தில் இருந்த காலத்தில், இளஞ் சிறார்களின் தொடக்கக் கல்வியில் தனது நாசக் கரத்தை நீட்டினார். அரை வேளை பள்ளிப் படிப்பென்றும், அரை வேளை பெற்றோர்கள் குலத் தொழிலைக் கற்றுக்கொள்வது என்றும், புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தைப் புகுத்தினார். இந்த நாச திட்டத்தை நாடே எதிர்த்தது. ஆனால், அன்று அமைச்சராக இருந்த ஆச்சாரியாரோ, பிடிவாதமாக இருந்துவிட்டார்.

அக் கல்வித் திட்டத்தைப் புகுத்தினதற்கு, அவரின் உள்ளக்கிடக்கை எதுவாக இருந்ததோ, அதே உள்ளக்கிடக்கையை ஒரு துலாக்கோலாகக் கொண்டுதான், நாகபுரி பல்கலைக் கழகத்தில் ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ள கல்வித் திருத்தக் கருத்துக்களையும் எடை போட்டுப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், ஆச்சாரியார் நாகபுரியில் கூறியுள்ள கல்வித்திருத்தங்களில் மறைந்திருக்கும் நச்சுத்தன்மையைப் பொதுமக்கள் புரிந்துகொள்வது சாத்தியமாகும்.

புதிய கல்வித் திட்டத்தை நாம் எதிர்த்ததற்குப் பல காரணங்களைக் குறிப்பிட்டோம். ஆனால், அவைகளில் முக்கியமாக இரண்டை மட்டுந்தான் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினோம்.

கல்வி பெற வேண்டியவர்களில் இரு பிரிவுகள் உள்ளன; ஒன்று, ஏற்கனவே கல்வித் துறையில் முன்னேறியுள்ள குடும்பங்களின் சிறார்கள்—மற்றொன்று, பின்னணியில் தள்ளப்பட்டு இருக்கிற குடும்பங்களின் சிறார்கள்—ஆக இரு பிரிவுகள் உள்ளன; புதிய கல்வித் திட்டத்தில் உள்ள அரைநேரப் பள்ளிப் படிப்பு ஏற்கனவே கல்வியில் முன்னேறிய குடும்பக் குழந்தைகளின் கல்வித் தரத்தைக் குறைக்காது—பள்ளியில் பெறும் குறைவான கல்வி பயிற்சி அப்பிள்ளைகளின் பெற்றோர்களால் நிரப்பப்படும்; ஆனால் கல்வியில் பின்னணியில் நீண்டகாலமாகக் கிடக்கிற குடும்பக் குழந்தைகளின் கல்விப் பயிற்சியோ அரைவேளைக்குறைவானப் பள்ளிப் போதனையோடு நின்றுவிடக் கூடியது. அதனால் அக்குழந்தைகளின் கல்வித்தரம் மெள்ள மெள்ளக் கெட்டொழியும் என்பதை ஒரு முக்கிய காரணமாகக்காட்டி, புதிய திட்டத்தைக் கைவிட்டு விடுமாறு, நாம் ஆச்சாரியாரை வேண்டிக் கொண்டோம்.

குலத் தொழில் கற்பது என்ற ஏற்பாடு, தீவிரமாக நசித்து வரும் தீய ஜாதி உணர்வை அழித்துவிடாமல் காப்பாற்றும் எனும் மற்றொரு முக்கிய காரணத்தையும் காட்டி புதிய திட்டத்தை நாம் எதிர்த்தோம்.

ஆச்சாரியாரின் புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தில், மேற்கூறிய இரண்டு பயங்கர விளைவுகளும் மறைந்துள்ளன என நாம் அப்பொழுது சுட்டிக்காட்டிய பொழுது, அதை ஒரே அடியாக, ஆச்சாரியாரும், அவர்தம் சீட கோடிகளும் மறுத்துக் கூறினர். ஆனால், அன்று நாம் கூறிய குறைபாட்டினை அறிந்தோ அறியாமலோ, ஆச்சாரியார் நாகபுரி சொற்பொழிவில், ஐயத்திற்குத் துளியும் இடமின்றி ஒப்புக்கொண்டுள்ளார்.

அன்பர் ஆச்சாரியார் கூறியுள்ளார் :—

"ஏற்கனவே நல்ல கல்வி வசதி பெற்றக் குடும்பங்களின் சிறார்களையும், அவ்வாறு வசதி பெறாத குடும்பங்களின் சிறார்களையும், தொடக்கப் பள்ளிகளில் இரு தனிப் பிரிவுகளாகப் பிரித்து, தனியான முறைகளின்படி கல்விப் பயிற்சி அளிக்க வேண்டும்."

"வீட்டில் படித்த சகோதர, சகோதரிகள் வழிகாட்டிகளாகவும், உதவியாளர்களாகவும், போதகர்களாகவும் இருக்கும் வசதியைப் பெற்ற ஒரு சிறுவன் அல்லது சிறுமியை நடத்துவது போன்றே, வழிகாட்டியற்ற தன்னந்தனியனான பையனை பள்ளியில்நடத்துவது நியாயமுமல்ல; விஞ்ஞான ரீதியானதும் அல்ல. இந்தத் தன்னந்தனியனான பையனுக்குப் பள்ளிக்கூடம் ஒரு விசித்திர உலகமாக இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் அவன் பார்ப்பவைக்கும் வீட்டில் உள்ளவைக்கும் தொடர்பேயில்லை."

"இத்தகைய நிலைமையில்,சமத்துவத்தின் மூலம் நடைமுறையில் சமத்துவமின்மையும், தீமையும், விரையமுமே ஏற்படுகின்றன. இவ்விதம் விஞ்ஞான முறைக்குப் பொருத்தமில்லாமல் அனைவரையும் ஒரே மொத்தமாகக் கவனிப்பதால், இரு பிரிவு மாணவர்களுக்குமே கஷ்டம் ஏற்படுகிறது."

புதிய கல்வித் திட்டத்தில் உள்ள, அரை நேரப் பள்ளிப் படிப்பு, அரைநேரம் வீட்டில் குலத் தொழில் பயிற்சி என்ற ஏற்பாட்டை, ஏற்கனவே கல்வி கற்றக் குடும்பத்துச் சிறார்களுக்கும், கல்வியில் பின் தங்கிய குடும்பத்தின் சிறார்களுக்கும் பொதுப்படையானதாகப் புகுத்தப்படுவதால், பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களின் கல்வித்தரம் குறைந்தொழியும் என நாம் அன்று கூறினோம். அதை அன்று மறுத்த ஆச்சாரியார், நாகபுரியில் இன்று, அதே உண்மையை மனமார ஒப்புக்கொள்ளுகிறார்.

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்ததற்கு நாம் கூறிய ஒரு காரணத்தை முழுதும் உண்மையானது என ஒப்புக் கொள்வதுடன், ஏற்கனவே கல்வியில் முன்னேறியுள்ளோர் — பின் தங்கியுள்ளோர் என்ற இரு பிரிவுகள் இருந்து வருவதையும் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவும் செய்கிறார்.

புதிய கல்வித் திட்டத்தின் மூலம், பின்தங்கிய மக்களின் எழுத்தறிவை ஒழித்துக்கட்டுவதுதான் ஆச்சாரியாரின் உள்ளக்கிடக்கை எனவும் நாம் அப்பொழுது சுட்டிக்காட்டினோம். அதையும், அப்பொழுது ஆச்சாரியார் மறுத்தார். ஆனால் இப்பொழுதோ அதே ஆச்சாரியார், பின்தங்கிய மக்களின் எதிர்காலக் கல்வியைக் கெடுத்தொழிக்கவும், உடலுழைப்பற்று வாழும் ஒரு ஏற்பாட்டைக் குறிப்பிட்ட ஒரு சிறு கூட்டத்திற்கே கூடுமானவரை என்றென்றும் சொந்தமாக ஆக்கும் கெடு நினைப்புடன், ஒரு தொடக்கக் கல்வி போதனை திட்டத்தைக் கூறியிருக்கிறார். முன்னாள் புதிய கல்வித் திட்டத்தின் மூலம் எதைச் சாதித்துக்கொள்ள எண்ணினாரோ, அதே எண்ணந்தான், நாகபுரியில் கூறியுள்ள தொடக்கக் கல்வி போதனை யோசனையிலும் நிரம்பி இருக்கிறது. இது பற்றி பிறகு எழுதுவோம்.

தான் அமைச்சராக இருந்து திணித்த புதிய தொடக்கக்கல்வி ஏற்பாட்டினால், படித்த குடும்பத்தின் சிறார்கள் என்றும் போல் படித்துக்கொண்டே போகவும், ஏற்கனவே கல்வி பெறாத குடும்பத்தின் சிறார்கள் கல்வி பெறும் வாய்ப்பையும் நினைப்பையுமே இழந்து விட நேரும் என நாம் கூறினதை, நாகபுரியில் ஆச்சாரியார் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு இருப்பதை முகமூடி கிழிந்தது என்றுதான்கொள்ள வேண்டியதாகிறது.

சமூக சேவை செய்க!

மைசூர் மாநிலத்தில் பயின்று வரும் மாணவர்கள் பல்கலைக் கழகப் பட்டங்கள் (டிகிரி), டிப்ளோமாக்கள் வாங்கவேண்டுமானால், இனிமேல், அவர்கள் குறைந்தது ஆறுமாத காலமாவது சமூகசேவைகள் செய்திருக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'ஒருவனே தேவன்'

காட்டுமன்னார்கோவில் சிறு வட்டத்தைச் சேர்ந்த 80 கிராமத்தில் வசிக்கும் அரிசனங்களும் ஒரே கடவுளை வணங்கவேண்டுமென்று காட்டுமன்னார் கோவில் ஆதிதிராவிட சங்கக்குழு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது

நகர சபை நிர்வாகத்தில்

உறுப்பினர்கள் அக்கரையின்மை

காரைக்குடி நகர நிர்வாகம் குறித்து சர்க்கார்

"காரைக்குடி நகர சபை, கடந்த 1953—54-ம் ஆண்டில், 62 கூட்டங்கள் நடத்தியுள்ளது; அவற்றில் 13 கூட்டங்களுக்கு 'கோரம்' இல்லாமையால் அவை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன: நகரசபைநிர்வாகத்தில் நகர சபை உறுப்பினர்கள் அதிகமான ஆர்வம் காட்ட வேண்டும்; கூட்டங்களுக்கு பெரும் அளவில் உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டும்."

இவ்வாறு காரைக்குடி நகர சபையின் நிர்வாக அறிக்கை மீது சர்க்கார் கருத்தறிவித்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

'பழமை' மறைந்தது-'புதுமை' மலர்ந்தது!

புதுடில்லி, ஜன 12—

"இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உயிர் துறந்த தியாகிகளுக்கு மரியாதை செய்வதென்ற முறையில் ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் 30-ந் தேதியன்று காலை 11 மணிக்கு நாடு முழுமையிலும் 2 நிமிட மௌனம் மேற்கொள்ளப்படும்,"

என்று, மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்குத் தெரிவித்துள்ளது.

காந்தியார் கொல்லப்பட்டதும் ஜனவரி திங்கள் 30-ம் நாளாகும்.

ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் 30-ந் தேதி காலை 11 மணிக்கு சங்கு ஒலிக்குமெனவும், அச்சங்கொலி கேட்ட உடனே எல்லா வித வேலைகளும், வண்டிப் போக்குவரத்துக்களும் நிறுத்தப் படுமெனவும், தொழிற்சாலைகள், காரியாலயங்கள், பள்ளிக்கூடங்களில் இருப்பவர்கள் எல்லாரும் உடனே எழுந்து நின்று 2 நிமிட நேரம் மௌனமாக நிற்க வேண்டுமென்றும், அந்த நேரத்தில் அகில இந்திய ரேடியோ நிலயமும் ஒலி பரப்புதலை நிறுத்தி விடுமெனவும் கூறப்பட்டுள்ளது.

ரயில் 'படுகை'கள் ரப்பரில் அமையும்

அமெரிக்காவில் புதிய ஏற்பாடு

கோலாலம்பூர், ஜன. 16—

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு முதல் ரயில்கள் ஓடும் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டிருக்கும் 'படுகை'கள், இனி ரப்பரினால் ஆனவையாயிருக்குமென்று தெரிகிறது.

இதுபற்றி 'ரப்பர் அபிவிருத்தி' என்ற இதழில் வெளிவந்துள்ள கட்டுரையில், இந்த 'படுகை'களுக்கு ஏற்படும் பெருஞ் சேதங்களைத் தவிர்க்கும் வகையில் இந்த ரப்பர் சாதனம் பொருத்தப்படுவதாகவும், அடுத்த ஆண்டில் 50 லட்சம் ரப்பர் 'படுகை'கள் உபயோகிக்கப்பட இருக்கின்றனவென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையாகவா ?

"மற்றொரு யுத்தம் நடைபெறுமானால், இங்கிலாந்து, 32 மணி நேரத்துக்குமேல் உயிர் வாழவே முடியாது,"

என்று, பிரிட்டன் இடதுசாரிக் கட்சிப் பிரமுகரான பெவான் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

இது பற்றி மேலும் அவர் குறிப்பிடுகையில், இனிமேல் யுத்தம் வந்தால் பிரிட்டனில் சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் சாத்தியப்படாது என்றும், இந்த முடிவு, தக்க ஆதாரங்களுடன் விஞ்ஞானிகள் கண்ட முடிவாகுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

நாடகங்களைத் தடுக்கும் காங்கிரஸ் ஆட்சி

நாளை கூட்டங்களையும் தடுப்பார்கள்

ஏழாண்டாகியும் ஏழையின் வாழ்வு மலரவில்லை

முதலாளிகளின் கைப்பாவையாகிவிட்டது காங்கிரஸ்

மதுரை அரசியல் மாநாட்டில் தோழர் கோவை இராசமாணிக்கம் தலைமையுரை

"ஆட்சியிலிருக்கிறவர்கள் தங்களுக்கு ஒரு சிலரின்—பார்ப்பனர்களின்—பிற்போக்குவாதிகளின் ஆதரவு வேண்டுமென்பதற்காக, முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பும் நாடகங்களைக் கட்டுப்படுத்தி, தடை செய்யும் நோக்கத்துடன் புதிய நாடகத் தடைச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

"இன்று முற்போக்குக் கருத்துடைய நாடகங்களுக்கு கட்டுப்பாடும் தடையும் விதிக்க முற்பட்டிருக்கிற காங்கிரஸ் அரசாங்கம், நாளை, பொதுக்கூட்டங்களில் பேசுவதற்குக்கூட கட்டுப்பாடும், தடையும் விதிக்கலாம்—இன்னதான் பேசலாம்; இவையிவை குறித்துப் பேசக் கூடாது—என்று கட்டுப்படுத்த முற்படக்கூடும். இந்த நிலை வளருவது ஒரு ஜனநாயக நாட்டிற்கு நல்லதல்ல."

—இவ்வாறு, மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டிற்குத் தோழர் மு. கருணாநிதிக்குப் பதிலாக, தலைமை தாங்கி நடத்திய தோழர் கோவை எஸ். எ. இராசமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார், தனது தலைமையுரையில்.

தொடர்ந்து பேசிய அவர், "இன்று காங்கிரஸ் ஆட்சி, ஒரு சில பிற்போக்குவாதிகளுடையவும் முதலாளிகள், பணக்காரர்கள், நிலப் பிரபுக்கள் ஆகியோரின் பாதுகாப்பிற்காக மட்டுமே இயங்குகிறது என்று கூறினால், அது மிகையாகாது," என்றார்.

"நாட்டிலே அவதியுறும் ஆயிரக் கணக்கான ஏழைகளின் வாழ்வு மலர, தொழிலாளர் தம் அவதிகள் குறைய, விவசாயிகளின் நலன்கள் உருவாக்கப்பட காங்கிரஸ் ஆட்சியாளர் இந்த ஏழாண்டு காலத்தில் ஏதும் செய்ய இயலாதவர்களாயிருந்திருக்கின்றனர். காங்கிரஸ் ஏழைகளின் நலன்களுக்காகப் பாடுபட இயலாது போய் விட்டதற்குக் காரணம், காங்கிரசே பெரும் முதலாளிகளுடையவும், பணமுதலைகளுடையவும் தயவில் வாழ்கிறதும் ஒன்றாகும். காங்கிரஸ் கட்சியே இன்று அத்தகைய பணத்திமிங்கிலங்களால் இயக்கப் பெறுகிறது என்றாலும், அது மிகையல்ல.

கோவையில் ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பலவற்றிற்குப் பரிகாரம் காணுவதற்காக, ஒரு முக்கூட்டுக் கமிட்டியை அரசாங்கம் நியமித்தது. தொழிலாளர் பிரதிநிதிகள், ஆலை அரசர்களின் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் அந்தக் கமிட்டியில் இருந்தனர். கமிட்டியும், பிரச்சினையின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதித்துவிட்டு சில சிபாரிசுகளைச் செய்தது; ஆனால் அந்த சிபாரிசுகளை அமுல் செய்ய சர்க்கார் தவறிவிட்டது. கமிட்டியின் தீர்ப்பு, தொழிலாளர்களுக்குச் சாதகமாயிருந்ததும், முதலாளிகளுக்குப் பாதகமாயிருந்ததும் தானே தீர்ப்பு அமுலாகாதிருந்ததற்குக் காரணம்? இது, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ், முதலாளிகளின் பாதுகாப்பிற்காகத்தானிருக்கிறது என்பதைக் காட்டவில்லையா?

வர்த்தக குமாஸ்தாக்களுக்கு தங்கள் வேலைக்கு சற்று பாதுகாப்பும் சலுகைகளும் தருகிற வகையில், 1944-ம் ஆண்டில் வெள்ளைக்கார ஆட்சியினர் ஒரு சட்டத்தினை உருவாக்கி வைத்திருந்தனர்.

பின்னர், 1952-ல் ஆட்சி பீடமேறிய ஆச்சாரியார், அந்தச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் செய்ததின் மூலம் வர்த்தகக் குமாஸ்தாக்களுக்குக் கிடைத்த பாதுகாப்பும் சலுகையும் சற்று தளர்ந்தது.

பின்னர், இப்போது உள்ள காமராசர் ஆட்சியும், '3 பேருக்குக் குறைவான எண்ணிக்கையுடைய குமாஸ்தாக்கள் பணிபுரியும் வர்த்தக நிலையங்களுக்கு அந்தச் சட்டம் செல்லாது,' என்ற திருத்தத்தைச் செய்தது. இதனால் எண்ணற்ற வர்த்தகக் குமாஸ்தாக்களின் நிலை சீர்கெட்டுப் போயுள்ளது. இப்படியும் காங்கிரசார் முதலாளிகளுக்கும் — பணக்காரர்களுக்கும் பாதுகாப்பும், சலுகையும் தர முற்படுவதுடன், தொழிலாளர்களுக்கு ஏற்கனவே கிடைத்து வந்த சலுகைகளையும், உரிமைகளையும் பறிக்க முற்படுகிறார்கள். இதுவும், காங்கிரசார், முதலாளிகளுக்குத்தான் பாடுபடுவர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அண்மையில் மத்திய வர்த்தகத் தொழில் அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சேலத்தில் இரும்புத்தொழிற்சாலை அமைவதை கிண்டல் செய்து பேசியிருக்கிறார். காரணம், வடநாட்டிலே பிர்லா என்ற பெரும் முதலாளிக்கு ஒரு இரும்பு ஆலை துவங்க அனுமதி பெற்றுத் தருவதற்காக அவர் ராஜிநாமாக்கூட செய்துவிடப்போவதாகக் கூறினார். பிர்லா தொழில் ஆரம்பித்தால், தன் மாமன், மைத்துனருக்கு, தன் பார்ப்பனக் குடி மக்களுக்குப் பதவியும், பணிபுரியும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதினால் தானே, சேலத்தில் அரசாங்கம் இரும்புத் தொழிற்சாலை அமைக்காது, அங்கு நிலக்கரி கிடைக்கவில்லை என்று கூறிக் கேலி பேசுகிறார்?

இதனை எடுத்துக்காட்டி, தென்னகத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவச் செய்ய சென்னை அரசாங்கத்தால் இயலவில்லை. இதுபோன்று இன்னும் எத்தனையோ பிரச்சினைகளைக் கவனிக்காமலேயே காலங் கடத்துகிறது காமராசர் ஆட்சி; ஆனால் அதே நேரத்தில், நாடகங்களைத்தடை செய்யசட்டம் உருவாக்குகிறார்கள். வடநாட்டவர்களுக்கு ஏஜெண்டுகளாயும், இங்குள்ள பிற்போக்கு வைதீகக் கும்பலுக்குப் பாதுகாப்பாயும் மட்டுமே சென்னை காங்கிரஸ் ஆட்சியிருக்கிறது. இந்த நிலையை என்று மாற்றுவது?"

ஆந்திர தேர்தலில் எந்தக் கட்சியும் பெருவாரி இடங்களைப் பெறாதாம்

ம. சோ. கட்சி செயலாளர் கருத்து

விஜயநகரம், ஜன. 10—

"ஆந்திராவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் மந்திரி சபை அமைக்கத் தேவையான பெருவாரி இடங்களை எந்தக் கட்சியும் பெறப்போவதில்லை," என்று, ம. சோ. கட்சிச் செயலாளரான தோழர் பி. வி. ஜி. ராஜு தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் கூட்டமொன்றில் பேசிய அவர், மேலும் பேசுகையில், "திரு—கொச்சியில் மறு தேர்தல்களுக்குப் பிறகு உருவான நிலைகள் ஆந்திராவிலும் உருவாகுமானால், ம. சோ. கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஆட்சேபனை கூறும்," என்றார்.

"மந்திரி சபை அமைத்தாலும் அமைக்காவிட்டாலும், கம்யூனிஸ்டுகளை மட்டும் மந்திரிசபை அமைக்க ம. சோ. கட்சி இடம்தராது," என்றார் அவர்.

"சந்தர்ப்பவசமாக கம்யூனிஸ்டுகள் ஆட்சிபீடமேறினாலும், இப்போதிருக்கிற அரசியல் சட்ட அமைப்பின்கீழ் அவர்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றிவிட முடியாது," என்றும் குறிப்பிட்டுள்ளார்.

★

193 இடங்கள்— 573 பேர் போட்டி

ஆந்திர சட்டசபைக்கான பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 193 இடங்களுக்கு 573-பேர் போட்டியிடுகின்றனராம்.

இவற்றுள் 185 இடங்களுக்கு ஐக்கிய காங்கிரஸ் முன்னணியினர் போட்டியிடுவராம்.

இந்த ஐக்கிய காங்கிரஸ் முன்னணியினரில் — காங்கிரஸ் 134, கிருஷிக் லோக் கட்சியினர் 37,— பிரஜா கட்சியினர் 14 பேர்கள் போட்டியிடுகின்றனர்.

169 இடங்களில் கம்யூனிஸ்டுகளும், 41 இடங்களில் பி. சோ.-வினரும், 6 இடங்களில் ஜனசங்கத்தினரும் போட்டியிடுகின்றனர்.

சுயேச்சையாக 175 பேர் போட்டியிடுகின்றனர்!

ஆரம்பத்தில், மொத்தம் 947-பேர் போட்டியிடுவதாக தங்கள் அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அவர்களுள் 25 பேர்களுடைய மனுக்கள் நிராகரிக்கப்பட்டன; 346 பேர் தங்கள் அபேட்சை மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

உண்மை—ஆனால் அற்புதமல்ல!

சுமார் 2,000 ஆண்டுகளுக்கு மேலாக சைபீரியாவில், பனிக் கட்டிகளுக்கிடையே புதைந்து கிடந்த குதிரைகளின் உடல்களை ரஷ்யர்கள் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

குதிரைகளின் பிடரி மயிர் கூடக் கெட்டு விடாமல், சேணத்துடனேயே அக்குதிரைகளின் உடல்கள் இருக்கின்றனவாம். கண்டெடுக்கப்பட்ட இந்தக் குதிரைகளும், மற்றும் பல 'ஆபூர்வ' பொருட்களும் லெனின் கிராட் மியூசியத்தில் (பொருட்காட்சி சாலை) வைக்கப்பட்டுள்ளனவாம்.

உயர்நிலைக் கல்விக்கு நிரந்தரக் குழு நியமிக்கப்படும்

இந்தி மொழியில் கலைக் களஞ்சியம் தயாராகிறதாம்!

இந்திய சர்க்கார் கல்வித் திட்டங்கள் பற்றி மௌலானா ஆசாத் விளக்கம்

புதுடில்லி, ஜன. 12—

உயர்நிலைக் கல்வி பற்றி சர்க்காருக்கு ஆலோசனை கூறவும், இந்திய உபகண்டம் முழுமையும் அமுல் நடத்தப்படும் உயர்நிலை கல்வித் திட்டத்தை ஆராய்ந்து சர்க்காருக்கு அதன் அபிவிருத்தி பற்றி ஆலோசனை கூறவும், இந்திய சர்க்கார் உயர்நிலை கல்விக் குழு ஒன்றை நியமிக்க இருக்கிறது என்று தெரிகிறது.

அகில இந்திய தொழில் கல்விக் குழுவினைப் போன்று உயர்நிலைக் கல்விக் குழு நிபுணர்களின் குழுவாக அது இயங்குமென்றும் தெரிகிறது.

இச்செய்தியை இந்திய சர்க்கார் கல்வி அமைச்சர் மத்திய கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"கல்வி பயிற்சி முடியும் சமயம், கல்வி பயில்வோர், வாழ்க்கைக்குத் தயாராக இருக்கின்ற நிலை ஏற்பட வேண்டும்; ஆனால், இப்போதுள்ள உயர்நிலைக் கல்வித் திட்டம், இப்பயனைத் தரவில்லை என்பது வருந்தத் தக்கது,"

என்று மௌலானா ஆசாத் குறிப்பிட்டார்.

"இப்போதுள்ள உயர்நிலைக் கல்வித் திட்டம், பலதரப்பட்ட மனோநிலை உள்ள மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை," என்று அவர் மேலும் கூறினார்.

பள்ளிப் புத்தகங்கள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கவும் இந்திய சர்க்கார் ஆவன செய்து வருகிறதாம். மத்திய ஆராய்ச்சி நிலையத்தினை ஒட்டி ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்ற ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமாம்.

நாட்டின் பல பகுதிகளில் அமுல் நடத்தப்படும் ஆதாரக் கல்வித் திட்டங்கள் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் அடையவில்லையாம்; ஏற்பட்டிருக்கிற முன்னேற்றமும் நாடு பூராவும் ஒரே மாதிரியாக இல்லையாம். இந்த நிலையைப் போக்கவும், ஆதாரக் கல்வித் திட்டத்தை சரிவர அமுல் நடத்தவும் சர்க்கார் சிறு குழு ஒன்றை நியமிக்கப் போகிறார்கள். இக்குழு ஆதாரக் கல்வி அமுல் நடத்தப்படும் இடங்களுக்குச் சென்று நேரில் விபரங்களைச் சேகரிக்கும்.

இந்தி மொழியில், 'கலைக்களஞ்சியம்' ஒன்றைத் தயாரிக்க சர்க்கார் தீவிரமாக முனைந்திருக்கிறதாம்; பாமர மக்களின் உதவிக்காகத் தயார் செய்யப்படும் இந்தி கலைக் களஞ்சியத்தின் முதற்பாகம் எழுதப்பட்டுஅச்சாகிறதாம்.

குழந்தைகளுக்கென்று புத்தகங்களைத் தயார் செய்ய இந்திய சர்க்கார் மூன்று திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது என்றும், சர்க்கார் விரும்பும் முறையில் புத்தகங்களைத் தயார் செய்யும் வெளியீடு நிலையங்களுக்கு இந்திய சர்க்கார் 20 பரிசுகள் அளிக்கத் திட்டமிட்டிருக்கிறது என்றும் மௌலானா ஆசாத் கூறியுள்ளார்.

சர்க்கார் பதவிகளுக்கு பட்டதாரிகளை நியமிக்கும் நிலை பற்றிக் கூறுகையில், இப்போதுள்ள பல்கலைக் கழகங்களில் கூட்டம் அதிகமாக இருப்பதற்கு, 'சர்க்கார் பதவிகளுக்கு பட்டதாரிகள் தான் தேவை,' என்ற நிலைமை இருப்பது தான் காரணம் என்று ஆசாத் கூறினார்.

இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து, 'சர்க்கார் பதவிகளுக்கு பட்டதாரிகள் அல்லாதவரை நியமிப்பது எப்படி?' என்று ஆலோசனை கூற இந்திய சர்க்கார் குழு ஒன்றை நியமித்திருக்கிறதாம். இக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், பல்கலைக் கழகங்களில் கூட்டம் குறைவதற்கு வழிகோரப் படும் என்றும் அவர் கூறினார்.

அதிகத் திறமை வாய்ந்த மாணவர்களே பட்டப் படிப்புக்கு அனுப்பப்படவேண்டும்; இப்போது, பொருளாதார வசதி யாருக்கு இருக்கிறதோ அவர்கள்தான் பட்டப் படிப்புக்குச் செல்கிறார்கள் என்றும் மௌலானா ஆசாத் குறிப்பிட்டார்.

அணுசக்தியின் அழிவு வேலையை காகிதத் தீர்மானம் கட்டுப்படுத்தாது

"நாகரீகத்தின் அழிவுக்கு நண்பனாக இந்தியா இருக்கக் கூடாது" என்கிறார் ஜே. சி. குமரப்பா

"அழிவு வேலைகளுக்கு அணுசக்தி உபயோகிக்கப்படுவதிலுள்ள அபாயத்தை, காகிதங்களில் நிறைவேற்றிவிடுவதாலோ, வரட்டு வாதங்களாலோ தடுத்து நிறுத்திவிட முடியாது., அந்த அபாயம், நமது சமுதாய—பொருளாதார—அரசியல் அமைப்பு முறையில் வெகு ஆழமாகப் பதிந்து கிடக்கிறது. போட்டி மனப்பாங்கு, பேராசை, துவேஷம், சந்தேகம் ஆகிய இந்த அபாயங்கள்தான் நமது அமைப்பு முறைகளில் காணப்படுகின்றன."

"அணுசக்தியை சமாதான காரியங்களுக்கே பயன்படுத்த வேண்டுமென்று கூறுவது, மக்கள் நடமாட்டம் உள்ள பாதையில் உட்கார்ந்துகொண்டு தவம் செய்யும் சந்நியாசிப் 'புலி'க்கு ஒப்பானதேயாகும்."

—இவ்வாறு, ஜே. சி. குமரப்பா அவர்கள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில், அவர் மேலும் கூறுவதாவது:—

"மனித வர்க்கத்தின் எதிர்காலத்தையெல்லாம் ஒரு சில மாபெரும் வல்லரசுகளிடம் ஒப்படைத்துவிட முடியுமா? அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பொருளாதாரம் சுயபோகத்தை அடிப்படையாகக் கொண்டதேயன்றி, சுயகட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல. இப்படிப்பட்டவர்கள், நெருக்கடியான கட்டங்களில் 'பரந்த' மனப்பான்மையுடன் நடந்துகொள்வார்கள் என்றும் கூற முடியாது.'

"அந்த அபாயத்திலிருந்து இந்தியா விலகியே இருக்க வேண்டும். அணுசக்தியை ஒன்று திரட்டுகின்ற ஏற்பாட்டில் இந்த நாடு சிக்கி, மூலப் பொருட்களை விற்றுவிடுவதின் மூலம், நாகரீகத்தின் அழிவுக்கு ஒரு நண்பனாகச் சேர்ந்து கொள்ளக் கூடாது."

ஆலைத் தொழிலாளர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

கதவடைப்பை எதிர்த்து தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்

எட்டு பேர் கைது: டில்லியில் நிகழ்ச்சி

புதுடில்லி, ஜன. 15—

இங்குள்ள 'சுதந்திர பாரத ஆலை'த் தொழிலாளர்களின் கூட்டமொன்றின்மீது போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கலைத்திருக்கின்றனர் என தெரிகிறது.

தொழிலாளர்கள் கல் எறிந்ததினால், 5 போலீசாருக்குக் காயம் பட்டதாகவும் கூறப்படுகிறது.

தொழிலாளர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தார்களாம். அதற்காக, அந்த ஆலை நிர்வாகிகள் வேலை நிறுத்தம் குறிப்பிட்ட அளவு கால முன்னறிவிப்பு இன்றி மேற்கொள்ளப்பட்டதால் சட்ட விரோதமானது எனக் கூறி, 15 நாளைக்கு ஆலையையே மூடிவிட்டார்களாம்.

இதை எதிர்த்து தொழிலாளர்கள், ஆலைமுன் கூடி ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஆலையின் தலைவாயிலை உடைத்து அத்துமீறி ஆலைக்குள் நுழைய முயன்றதாகவும் கூறப்படுகிறது. அதன் பேரிலேயே தொழிலாளர் மீது போலீசார் தடியடியும் கண்ணீர்ப்புகையும் பிரயோகித்தார்களாம்.

நகரில் உள்ள இன்னும் சில ஆலைகளிலும், இத்தகு வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டு கட்சித் தொழிற்சங்கவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் எட்டு பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

'பரம்பரை'ப் பேச்சு!

"எந்த சர்வதேச போலீஸ் நடவடிக்கையிலும் அணுகுண்டு ஆயுதங்கள் உபயோகிக்கப்படுமென்று எனக்குத் தோன்றவில்லை; ஆனாலும், இராணுவ விஷயங்களைப் பொறுத்தவரையில் எதையுமே, 'நடைபெறாது' என்றுசொல்லி, தள்ளிவிடுவதற்கில்லை."

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் அணுகுண்டு உபயோகிப்பது பற்றி கருத்தறிவித்திருக்கிறார்.

1500 ஆலைத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

வேலைப் பளு அதிகரித்திருப்பதை எதிர்த்து நடவடிக்கை

மதுரை ஆலையில் சம்பவம்

மதுரை, ஜன 16—

மதுரை ஆலையில் உள்ள இரு நூற்புப் பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களின் வேலைப்பளு அதிகரித்திருப்பதை எதிர்த்து ஒருநாள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தார்களாம். அதற்காக அவர்களின் 'டோக்கன்'களை தர நிர்வாகிகள் மறுத்திருக்கின்றனர்.

'டோக்கன்'கள் இன்றி அந்த தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்குச் செல்ல இயலாது. ஆகையால் அந்த 'டோக்கன்'களைத் திருப்பித் தரவேண்டுமென்ற அந்த தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக சுமார் 1500 தொழிலாளர்கள் நேற்று வேலை முடிந்தவுடன் வீடு திரும்ப மறுத்து, மதுரை ஆலைக்கட்டிடத்திற்குள்ளேயே தங்கிவிட்டனராம்.

மதுரை மாவட்ட அதிகாரி தொழிலாளர்கள் கூடிருப்பது சட்ட விரோதமென்றும் கலைந்துவிடவேண்டுமென்றும் கூறியும் தொழிலாளர்கள் கட்டிடத்தை விட்டு வெளியேறமறுத்துவிட்டனராம். பிறகு போலீசார் ஆலைக் கட்டிடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு, பலவந்தமாக 1500 பேர்களையும் வெளியேற்றியிருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திலீடுபட்டிருந்த தொழிலாளர்கள் மூவர் மீது போலீசார் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றனராம்.

எந்த இரு பிரிவுகளில் வேலைப் பளு அதிகரிக்கப்பட்டிருக்கிறதாகக் கூறுகிறார்களோ அந்தப் பிரிவுகளை இரண்டு நாட்களுக்கு மூடிவிட்டு பின்னர் தொழில் தகராறு கமிஷனரின் முடிவு தெரிந்ததும் அவைகளைத் திறப்பது என்றும் நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

ஈ. வெ. கி. சம்பத் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து அறுத்துக்கொள்ள அனுமதியோம்' என்ற கொள்கையில், 'எல்லோருமே ஒன்றுதான்' என்றே திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; 'எல்லா அகில இந்தியா'க்களையும், ஒரு கோடிட்டு, அதற்கப்பால் ஒதுக்கிவைக்கிறது.

கடந்த எப்ரல்—மே மாதத்தில் மக்கள் சபையில் நடந்த விவாதத்தின்போது, இந்தி மொழியை 10 ஆண்டுகளில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது,' என்பது பற்றிப் பேசுகையில், எல்லா 'அகில இந்தியா'க்களும்—புரட்சிக்காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்கிற கம்யூனிஸ்டுகள் உட்பட — தென்னாட்டவர்மீது இந்தியை எப்படித் திணிப்பது என்ற ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்களே—அவர்கள் மக்கள் சபையில் இந்தப் பிரச்சினையின்போது கூடிப் பேசிய பாணி, அவர்கள் எல்லாம்—காங்கிரஸ்காரர்களும், ம. சோ.கட்சியினரும், இந்து மகா சபையினரும் தென்னாட்டை அடிமையாக்க 'ஐக்கிய முன்னணி' அமைத்திருக்கிறார்கள், நடைமுறையில் – என்பதைத் தானே காட்டிற்று!

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மத்திய ஆட்சி பீடம் தயாரித்து நிறைவேற்றி வரும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய்க்கு 15 அணா விகிதத்திற்கு வடநாட்டிலேயே திட்டங்கள் நிறைவேற்றப்படுவதும், திராவிடர்கள் பகிரங்கமாக மோசடி செய்யப்பட்டிருப்பதுமான அநியாய சம்பவங்களை வஞ்சகப் போக்கினை, தம்மை முற்போக்குவாதிகள் என்று அழைத்துக்கொள்ளும் எந்த 'அகில இந்தியா'வும் தட்டிக் கேட்கவில்லையே, என்? இந்த ஐந்தாண்டுத் திட்டமானது; பொருளாதார அவிவேகமானது—அநியாயமானது என்று எந்த அகில இந்திய நிறுவனமும் எடுத்துக்கூறவில்லையே, ஏன்?

வடநாட்டு அதிதிகளின் வாழ்வைச் சீர்செய்ய இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள ரூ. 210 கோடி போதாது—இன்னும் வேண்டுமெனக்கோரி, கம்யூனிஸ்டுகள் அங்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள்: ஆனால், இலங்கையிலிருந்து விரட்டப்படுகிற திராவிடர்களுக்கு வாழ்வுதர விரும்பவில்லை இந்திய சர்க்கார்; இந்த வேறுபாட்டினை எடுத்துக்கூறி நியாயம் பெற, எந்த 'அகில இந்தியா'வுக்கும் அக்கரை பிறக்கவில்லையே, ஏன்?

சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கோரினால், கேலி பேசுகிறார் அமைச்சர் டி. டி. கே.; ஆனால், பிர்லாவின் உதவியுடனும் ரஷியாவின் உதவியுடனும் வடநாட்டில் இரும்புத் தொழிற்சாலைகளை அதிகரிக்க வேகமாக முனைகிறார்.

இந்தச் சதிகளை, திராவிடர்கள் வஞ்சிக்கப்படும் இந்தக்கோர நிலையைக் கண்டு எல்லா 'அகில இந்திய நிறுவனங்'களும் வாய்மூடி மௌனிகளாயிருக்கின்றனவே, ஏன்?

எல்லா அகில இந்திய நிறுவனங்களும் வட இந்திய மக்களின் அரசியல்—பொருளாதார வளர்ச்சிக்காகவேதான் இருக்கின்றனவேயன்றி, தென்னாட்டவரைப் பற்றி—திராவிடரின் நலன்கள் குறித்து அவர்களுக்கு அக்கரை இருக்கவில்லை; இருக்கவும் முடியாது.

அகில இந்திய நிறுவனங்கள் எல்லாவற்றின் தலைமைப்பீடங்களும் வட நாட்டில்தான்; அவற்றின் தலைவர்கள் எல்லோரும் வட நாட்டவரே; இங்கு—தென்னாட்டில், வட இந்தியர்களின் நலன்களுக்காக உள்ள அகில இந்திய நிறுவனங்களின் கிளை நிறுவனங்கள் மட்டும் உண்டு; அந்த வட இந்தியத் தலைவர்களுக்கு 'போலோ ஜவாகர்லால் நேருஜிக்கு ஜே,' என்று கோஷமிட தொண்டர்கள் உண்டு; இங்குள்ள அகில இந்தியக் கட்சிகளின் கிளைகளும், அதன் நிர்வாகிகளும் இந்தத் தொண்டர்களைச் சேர்த்துத் தருவதைத் தவிர, அந்தக் கட்சியின் கொள்கைகளை உருவாக்குவதிலோ வேறு எதிலுமோ பங்கு பெற மாட்டார்கள். வட இந்தியத் தலைவர்களை வாழ்த்தி வரவேற்கும் ஒரு சேவையைத் தவிர, இங்குள்ள இந்த அகில இந்திய நிறுவனங்களின் கிளைகளால் எதும் செய்ய முடிவதில்லை; எனவேதான், நாம் இந்த 'அகில இந்தியா'க்கள் எல்லோரையுமே திராவிடரின் விரோதிகள் பட்டியலில் சேர்க்கிறோம்.

எல்லாக் கட்சியினரும் ஒருமுகமாகக் கூறுகிறார்கள்—'இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமையில்தான் நமது சக்தி இருக்கிறது; நாட்டை பிளவுபடுத்தும் சக்திகளை வளர்க்காதீர்—ஆதரிக்காதீர்'—என்று!

இந்த நாட்டிலே எங்கே ஒற்றுமை இருக்கிறது?

இங்கு இருப்பதெல்லாம் (Imposed uniformity) புகுத்தப்பட்ட வேற்றுமை இன்மையே தவிர, ஒற்றுமை (Unity) இல்லையே!

இந்த உண்மையை எல்லா 'அகில இந்தியா'க்களும் மறந்துவிட்டதாகவோ, அல்லது வேண்டுமென்றே மறைப்பதாகவோதான் உள்ளன!

திரு—கொச்சி காங்கிரஸ் தலைவர் அண்மையில் ஐக்கிய கேரள மாநிலம் அமைப்பதற்கென்று, தமிழகத்தில் உள்ள கோவை மாவட்டம் போன்றவற்றிலிருந்தும் சில பகுதிகளைச் சேர்த்து வேண்டுமெனக் கோரி அறிக்கை வெளியிட்டார். அதை எதிர்த்து, அப்போதைய தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் அறிக்கை வெளியிட்டார். இதைப் போலவே, தமிழருக்கும்—ஆந்திரருக்கும், ஆந்திரருக்கும் — ஒரியருக்கும், ஒரியருக்கும்—மராட்டியருக்கும் தகராறுகள் இருப்பதைக் காண்கிறோம்.

இப்படி, நாட்டில் ஒற்றுமை நிலவவில்லை என்பதற்கான சம்பவங்கள், ஆதாரங்கள் பலவற்றை நாம் கூறமுடியும். இதற்குக் காரணம், இந்தியாவில் வாழும் மக்கள் எல்லோரும் 'ஒரே இன மக்கள் அல்ல' என்பதுதானே!"

இவ்வாறெல்லாம் தோழர் சம்பத் அவர்கள் எடுத்துக்காட்டி, தனி இனமான திராவிடர்கள், தங்களின் உரிமையோடு கூடிய வாழ்க்கைக்காக திராவிட நாடு வேண்டுமெனக் கோருவது அசைக்க முடியாத நியாயத்தின் பாற்பட்ட இலட்சியமாகும் என்றுரைத்து, "இத்தகைய விடுதலை கோரிக்கையை அலட்சியப்படுத்தியும், இன்னும் பல பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் இருக்கும் நிலையில், ரோம்நாட்டு ஜூலியஸ் சீசர், உள்நாட்டிலே தன்னுடைய செல்வாக்கு மங்கினால், வெளி நாடுகள் மீது படையெடுத்து, வெற்றி கொண்டு உள்நாட்டில் தன் ஆதிக்கம் நிலைத்திருக்கச் செய்வானாம்; அதைப் போலவே, பண்டிதரும், சீன விஜயம், ரஷ்ய விஜயம், சமாதானப் பணி என்று கூறிக்கொண்டு, தன் ஆதிக்கத்தை அந்த வெளி ராஜ்யங்களைக்கொண்டு நிலைக்கச் செய்ய முயற்சிக்கிறார்," என்றும் குறிப்பிட்டு, இந்த நிலைகளை உணர்ந்துதான் நாம் நமது அரசியல் நடைமுறைகளைத் தெளிவாக வகுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட்டு சிறப்பாக உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும், "1913-ல், மா-சே-துங்கை, 'துரோகி' என்று கூறிவிட்டு, 1950-ல், மா-சே-துங்கை 'விடுதலை வீரன்' என்று கூறும் அரசியல் வழி முறைக்காரர்கள் அல்ல நாம்; நல்ல அரசியல் தெளிவும், சிறந்த அரசியல் பண்புக்குக் குரு பீடமாகவும் விளங்குபவர்கள் நாம்," என்று குறிப்பிட்டார்.

சென்னையில் திராவிடர் திருநாள்

பல்லாயிரவர் பங்கு பெற்ற கண்கொள்ளாக் காட்சிகள்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை உள்ளிட்ட கழக முன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொண்டனர்

(நமது தனி நிருபர்)

சென்னையில் திராவிடரின் தேசியத் திருநாளான பொங்கல் திருநாள் 14—1—55 வெள்ளியன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள், விழாவிலே குடும்பத்துடன்—குழந்தைகள் உட்பட கலந்துகொண்டனர்.

பலவகையான விளையாட்டுப் பந்தயங்கள், நாடகப் போட்டி, குழந்தைகளின் அழகுப் போட்டி, சித்திரப் போட்டி ஆகியவை நடைபெற்றன.

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களின் கயிறிழுப்புச் சண்டை, விழாவின் நடுநாயகமாக விளங்கியது.

விளையாட்டுப் பந்தயங்கள், சேத்துப்பட்டு சேரு பூங்கா மைதானத்தில் அன்று மாலை 3 மணிக்குத் துவங்கி மாலை 6 மணியளவில் முடிந்தன.

பின்னர், எழும்பூர், அழகிரி திடலில் அமைக்கப்பட்டிருந்த விமரிசையான அரங்கில் தோழியர் பி. எஸ். செல்வா, தோழர் நாகூர் அனிபா ஆகியோரின் இன்னிசை விருந்து, நாடகப் போட்டி, குழந்தைகளின் சித்திரப் போட்டி, அழகுப் போட்டி ஆகியவை சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

இடையிடையே சிறிது மழை பெய்து கொண்டிருந்தபோதிலும், கூடியிருந்தோர் வெகு உற்சாகத்துடன் விழாவில் பங்கேற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பரிசுகள் வழங்கினார்; தோற்றுப்போனவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தவர் இந்த ஆண்டு திராவிடர் திருநாளை வெகு சிறப்பாக நடத்தியமைக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தார்கள்.

தாய்மார் கழகம்

18—1—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் தோழர் மயிலை சிவமுத்து பேசுவார்.

கல்கத்தா மாலுமிகள் வேலை நிறுத்தம்

கல்கத்தா, ஜன. 16—

மாலுமிகள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் எட்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பிரச்சினைக்குப் பரிகாரம் காண சர்க்கார் தலையீட்டுடன் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவில்லை.

சில கப்பல் கம்பெனிகள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மாலுமிகளை வேலையிலிருந்து நீக்கிவிடுவதா, வைத்துக்கொள்வதா என்பதுபற்றி சர்க்காருக்கு முடிவு தெரிவிக்கவிருக்கிறார்களாம்:

ஹூக்ளி நதியில்கப்பல் போக்குவரத்து சில 'விசுவாச'முள்ள மாலுமிகளின் துணையுடன் நடைபெறுகிறதாம்.

மின்சார ஊழியர் வேலை நிறுத்தம் நின்றது

கடந்த 19 நாட்களாக மைசூர் மாநிலமெங்கும் நடைபெற்று வந்த மைசூர் மாநில மின்சார ஊழியர் வேலை நிறுத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

ஊழியர்கள் தேவைகள்பற்றிக் குறிப்பிடுகையில் பிரதேச காங்கிரஸ் தலைவர் சென்னய்யா, அவர்களது கோரிக்கைகள் சர்க்காரால் நியமிக்கப்பட இருக்கும் 3 பேரடங்கிய குழு ஒன்றின் தீர்ப்புக்கு விடப்பட்டுவிடுமெனவும், அம்மூவரில் ஊழியர் யூனியனின் பிரதிநிதி ஒருவர் இருப்பாரென்றும், அக்குழு, இன்னும் 5 திங்களுக்குள் தனது அறிக்கையைக் கொடுக்குமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

அக்குழுவின் சிபாரிசுகளையெல்லாம் காலதாமதமில்லாமல் அமுல் செய்வதற்கு தாம், சர்க்காரை வற்புறுத்தப் போவதாகவும் அவர் உறுதியளித்திருக்கிறாராம்.

இராமேஸ்வரம் பாண்டியன் நினைவுப் படிப்பகம்

13—1—55 மாலை, இராமேஸ்வரம், பாண்டியன் திடலில், மேற்படி படிப்பகச் சார்பில் பொதுக் கூட்டம் தோழர் எஸ் துரைராசு தலைமையில் நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், மதுரை எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,